தமிழ்நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1973 நவம்பர் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 299, 300, 301, 302 ஆகிய எண்களுள்ள வினாக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Cancer Units in District Hospitals

* 303 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI
THIRU N. K. PALANISAMY
Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that there are cancer units in each of the District Headquarters Hospitals; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

தருமபுரி மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்

* 304 **வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம் எற்படுத்தப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் . இல்லை.

[1973 நவம்பர் 22

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலுள்ள எல்லா தாலுக்கா தலைநகரங்களிலுமுள்ள அரசு மருத்துவ மனைகளிலும் இரத்த சேமிப்பு நிலையம் இல்லாத காரணத்தால் நோயாளிகளுக்கு இரத்தம் கொடுக்க இயலாமல் அவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது. மாயூரம் மருத்துவ மனையில் இரண்டு மூன்று பேர் இப்படிப்பட்ட காரணத்தால் இறந்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தாலுக்கா தலைநகரங்களிலுள்ள அரசு மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் கட்டாயம் இரத்த சேமிப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்படியாக ஓராண்டுக்கு நான்கு அல்லது ஐந்து இடங்களில் இந்த இரத்த சேமிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட ஒன்றிரண்டு இடங்களில் சில சிக்கல்கள் காரணமாக அந்தப் பணி சரியாக நடைபெறவில்லை. அவைகளைச் செம்மைப்படுத்தவேண்டுமென்று இயக்குநருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மருத்துவ மனையில் மருந்துகள் இருப்பு

*** 305 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் போதுமான குளுகோஸ் மற்றும் டி. வி. மருந்துகள், இன்ஸ்லின் மருந்துகள் 1973, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இல்லாததால் ஆப்ரேஷன் கேஸ்கள் மற்றும் முக்கியமான கேஸ்கள் கவனிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவ்விதம் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.